பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 12 2025** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் எரிசக்தி மற்றும் தொழில்நுட்பத் துறையில் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதே அரசின் நோக்கம் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

**3.** தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

**4.** பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழகத்தில் **60** சதவீதம் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

**5.** **19** வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவின் எரிசக்தி மற்றும் தொழில்நுட்பத் துறையில் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அணுசக்தி மேம்பாட்டு மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு வரவேற்பு தெரிவித்து சமூக வலைதளத்தில் இதனைப் பதிவு செய்துள்ள பிரதமர், இந்தியாவின் தூய்மையான எரிசக்தி எதிர்காலத்திற்கு இந்த மசோதா ஒரு மைல் கல்லாக இருக்கும் என்று பாராட்டியுள்ளார்.

அணுசக்தி துறையில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரும் வகையில் இந்த மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கும், ஒட்டுமொத்த உலகில் தூய்மையான எரிசக்தி என்ற கனவை நிறைவேற்றவும் இது உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மசோதா தனியார் துறைக்கு ஏராளமான வாய்ப்புகளையும், இளையோருக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதே அரசின் நோக்கம் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற கற்றல் மற்றும் கற்பித்தலில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், கல்வித் துறையில் உள்ள சவால்களைக் களைவதற்கு செயற்கை நுண்ணறிவு பேருதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

தரமான கல்வியை உள்ளடக்கியதாகவும், அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வகையிலும் மாற்றுவதற்கு இத்தொழில்நுட்பம் உதவும் என்றும் அவர் கூறினார்.

மாணவர்களின் தேவைக்கேற்ப தனிப்பட்ட கற்றல் முறையை உருவாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவது, மற்றும் ஆசிரியர்களை தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்துவது அரசின் முக்கிய நோக்கம் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<<>>>>

எந்தவொரு சூழ்நிலையிலும் தற்கொலை செய்துகொள்வது என்பது தீர்வாக அமையாது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று வலியுறுத்தி முருக பக்தர் ஒருவர் தீக்குளித்து உயிரை மாய்த்துக்கொண்ட செய்தி பெரும் அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

நீதிமன்றத்தின் பார்வைக்குட்பட்ட எந்தவொரு பொது விவகாரத்திற்கும் உயிரை மாய்த்துக்கொள்வது தாம் கொண்டிருக்கும் கொள்கைக்கு முரணானது என்றும், யாரும் இதுபோன்ற செயலில் ஈடுபடக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி சட்டத்தை ரத்து செய்து அதற்கு பதிலாக வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் குறித்த மசோதாவை செயல்படுத்த வேண்டாம் என்று மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், புதிய மசோதாவில் வேலைவாய்ப்பை ஆண்டுக்கு 125 நாட்களாக அதிகரித்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாக இருந்தாலும் அதில் உள்ள மற்ற விதிகள் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

60க்கு 40 என்ற நிதிப் பங்கீடு மாநிலங்கள் மீது கூடுதல் சுமையை ஏற்படுத்தும் என்றும், கோடிக்கணக்கான கிராமப்புற விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

மாநிலம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் முடிவடைந்த நிலையில் இந்தப் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது.

அனைத்து வாக்காளர்களும் வரைவு வாக்காளர் பட்டியலைப் பார்வையிட்டு தங்களது பெயர் இடம்பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் கடந்த மாதம் 4ஆம் தேதி தொடங்கி, இம்மாதம் 14ஆம் தேதி வரை நடைபெற்றது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாயிலாக வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டு அவை நிரப்பப்பட்டு ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

தகுதியுள்ள வாக்காளர்கள் பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை என்றால் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் மேல்முறையீடு செய்து தங்களது பெயரை இணைத்துக்கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் அந்தந்த வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் தாலுகா அலுவலகங்கள், வருவாய் கோட்ட அலுவலகம்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் இன்று முதல் பார்வைக்கு வைக்கப்படும்.

<<<<>>>>

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார்நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 60 சதவீதமும், போக்சோ குற்றங்கள் 52 சதவீதமும் அதிகரித்துள்ளதாக கூறினார்.

திருப்பரங்குன்றத்தில் தீபம் தொடர்பான சர்ச்சை மற்றும் அதில் காவல்துறையின் தலையீடு காரணமாக இளைஞர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் வேதனையளிப்பதாக அவர் கூறினார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

ஆஞ்சநேயர் ஜெயந்தியை முன்னிட்டு, நாமக்கல்லில் உள்ள, பிரசித்தி பெற்ற அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலில் இன்று அதிகாலை சிறப்பு பூஜை நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Kannan - 47 Sec)**

<<<<>>>>

நீலகிரி, மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும், அதிகாலை வேளையில் ஒருசில இடங்களில் பனிமூட்டம் காணப்படும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே நீலகிரி மாவட்டம் உதகையில் அதிகாலை உறைபனி காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 47 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஆஃப்கனிஸ்தானில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி ஒன்றாக பதிவானது.

------------

இந்தியா - நேபாள் இடையே சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் இரு நாடுகளின் உயரதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் நேபாளத்தில் நேற்று நடைபெற்றது.

------------

இலங்கையில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய ராணுவத்தினர் தொடர்ந்து பாலங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

------------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நுகர்வோர் குறைதீர் கூட்டம் நேற்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

**19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.**

**துபாயில் இப்போட்டி காலை 10.30 மணிக்கு தொடங்குகிறது.**

**-------------**

**இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான 5வது மற்றும் இறுதி டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.**

**அகமதாபாதில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**